திருமலை அநந்தாழ்வான் வைபவம்

http://acharya.org

மதுரகவி ஆழ்வார் & அநந்தாழ்வான்

திருப்பதி

http://acharya.org

திருமலை அநந்தாழ்வான் வைபவம்

கடவுளின் கருணை

ஸ்ரீய:பதியான ஸர்வேஶ்வரன் பரம க்ருபையாலே, பூவுலகில் வாழும் ஸம்ஸாரி சேதனர்களை நல்வழிப்படுத்தி, வாழ்விக்க விரும்பி, முனிவர்கள் மூலம் ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண நீதி நூல்களை வெளியிட்டு அருளினான். அவை போதிய பலன்களை அளிக்காததால், பிறப்பிலியான பகவான் (அஜாயமாந: பஹுதா விஜாயதே) தானே பல அவதாரங்களை மேற்கொண்டு, மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடும்படி செய்ய முற்பட்டான். ஆனால், வெற்றி முழுமையாகக் கிடைக்காததால், திவ்ய ஸூரிகளான ஆழ்வார்களை ஸஜாதீயர்களாய் பிறப்பித்தும், அவர்களால் 108 திவ்ய தேஶத்து எம்பெருமான்கள் மீது போற்றிப்பாடிய திவ்ய ஸூக்திகளான 4000 திவ்ய பிரபந்த பாடல்களை கற்றுணர்ந்து அடியார்கள் கடைத்தேறுவற்காக ஆசார்ய ஶ்ரேஷ்டர்களை அவதரிப்பித்தும் அருளினான்.

ஸ்ரீராமாநுஜரின் அவதாரம்

தொண்டை மண்டலத்திலுள்ள ஸ்ரீபெரும்பூதூரில் வைதிக குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீகேஶவ ஸோமயாஜிக்குத் திருக்குமாரராக பிங்கள ஆண்டு, சித்திரை மாதம், வியாழக்கிழமை, திருவாதிரை நட்சத்திரம் கூடிய ஶுப தினத்தில், ஹாரித கோத்திரத்தில் ஸ்ரீராமாநுஜர் ஆதிஶேஷாம்ஶராக அவதரித்தார். இளம் வயதிலேயே, உபய வேதாந்தங்களிலும் புலமை பெற்று, பின்னர், அர்த்த பஞ்சகத்தையும் (1)

http://acharya.org

ஸ்வஸ்வரூபம் 2) பரஸ்வரூபம், 3) உபாய ஸ்வரூபம், 4) விரோதி ஸ்வரூபம், 5) புருஷார்த்த ஸ்வரூபம்) ஸ்ரீபாஷ்யத்தையும் மக்களிடையே காலக்ஷேபம் மூலமாக வெளிட்டுவந்தார். பின்பு, ஸ்ரீரங்கம் பெரிய கோயில் ஜீயர் பதவியை ஏற்று, ஆகம விதிப்படி கோயில் பூஜை, புநர்சமஸ்காரங்கள் செவ்வனே நடக்கக் கண்காணித்துவந்தார்.

அநந்தாழ்வானின் தோற்றம்

பதரிகாஶ்ரமத்தில் ஸ்ரீமந்நாராயணன் தானே ஆசார்யனாகவும், ஶிஷ்யனாகவும் (நாராயணனாகவும், நரனாகவும்) இருந்து திருமந்த்ரத்தை உபதேஶித்தும் அநுஷ்டித்தும் செய்து காட்டியதுபோல, ஆதிஶேஷாம்ஶமான தானும் ராமாநுஜராக அவதரித்து தர்மத்தை போதித்தும், அநந்தாழ்வானகப் பிறந்து தர்மத்தைக் கடைப்பிடித்தும் வந்தார். அநந்தாழ்வானும் ஸ்ரீராமாநுஜரைப்போல வைதிக ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய குடும்பத்தில் சிறுபுத்தூரில் (மைசூர் காவிரிக் கரையில்) கேஶவாசாரியர் என்பவருக்கு ஸத்புத்திரராய் பிறந்தார். பாரத்வாஜ கோத்ரம். சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் அவதாரம். சிறு பிராயத்திலேயே ஸகல ஶாஸ்த்ரங்களிலும், கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்களிலும் புலமை பெற்றார். பாகவத கைங்கர்யமே தன் லட்சியமாகக் கொண்டிருந்தார். வித்வான்களின் மத்தியிலேயே அவர் எப்பொழுதும் காணப்பட்டார். எப்படி எல்லா நதிகளும் கடலைச் சென்று சேருகின்றனவோ (ஆகாஶாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்) அதுபோல அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸ்ரீராமாநுஜரை ஆசார்யனாக பற்றுவதை கேள்விப்பட்டு, தானும் ஸ்ரீராமாநுஜரை அடிபணிந்து சீடரானார். அநந்தாழ்வானுடன் எச்சான், தொண்டனூர் நம்பி, மருதூர் நம்பி போன்றவர்களும் ராமாநுஜசிஷ்ய கோஷ்டியில் பங்கு

http://acharya.org

கொண்டனர். ஒரு சமயம் ராமானுஜர் இவர்களை அருளாளப்பெருமாள் எம்பெருமானாருக்கு சீடர்களாய இருக்கும்படி அனுப்பிவைத்தார். ஆனால் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரோ ''இவர்களை சீடர்களாக ஏற்க எனக்கு எவ்வித தகுதியுமில்லை. குருவி தலையில் பனங்காயை வைப்பது போலுள்ளது என்று கூறி அவர்களை எம்பெருமானாரிடமே திருப்பி அனுப்பிவிட்டார்.''

திருமலையில் கைங்கர்யம்

ஒரு சமயம் எம்பெருமானார் காலக்ஷேப கோஷ்டியில் ''ஒழிவில் காலமெல்லாம்'' திருவாய்மொழிப்பதிகம் (மூன்றாம் பத்து, மூன்றாம் திருவாய்மொழி) தொடங்கி உபந்யாஸம் நடத்துகொண்டிருந்தது. இரண்டாம் பாட்டு வந்தபொழுது

எந்தை தந்தை தந்தை தந்தைக்கு
முந்தை வானவர் வானவர் கோனொடும்
சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து
அந்தமில் புகழ்க்காரெழில் அண்ணலே

புஷ்ப மண்டபமான திருமலையில் நித்யவாஸம் செய்து, சிந்து பூ மகிழும் திருவேங்கடத்தானுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்வாருண்டோ? என்று வினவ, ஒருவரும் முன்வரவில்லை. அக்காலத்தில், ''குளிர் அருவி வேங்கடத்தில்'' வன விலங்குகள் நடமாட்டம் அதிகம். மேலும் எம்பெருமானாரை விட்டு பிரிய ஒருவருக்கும் மனம் வரவில்லை. ஒருவரும் முன்வராததைக் கண்டு அநந்தாழ்வான் எழுந்து நின்று எம்பெருமானாரை நோக்கி, ''ஸ்வாமி! உம்முடைய விருப்பம் வீணாவது கூடாது. அடியேன் சென்று அக்கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆசீர்வதியுங்கள்'' என்று சொன்னார். இவ்வாறு சொன்ன அநந்தாழ்வானை ராமானுஜர் அணைத்துக்கொண்டு ''அநந்தா! நீ ஒருவனே இக்கோஷ்டியில் ஆண்பிள்ளை!'' என்று

http://acharya.org

பாராட்டினார். அன்று முதல் அநந்தாழ்வான் வம்ஶத்தினர் ''திருமலை அநந்தான் பிள்ளை'' வம்ஶத்தினர் என்று அழைக்கப்படலானார்கள்.

திருமலையில் நந்தவனம் அமைத்தல்

திருமலையில் நந்தவனம் அமைக்கத் தேவையான குளம் வெட்டத் தொடங்கினார். குளத்திற்கும், தோட்டத்திற்கும் தன்னுடைய ஆசார்யரான ராமாநுஜர் பெயரையே சூட்டினார். புஷ்ப கைங்கர்யத்தில் மிக்க ஈடுபாடு கொண்ட காரணத்தால், காஞ்சி அருளாளருக்கு திருக்கச்சி நம்பியைப் போல திருமலையப்பனுக்கு இவரும் அந்தரங்க கைங்கர்யபரர் ஆனார்.

இவர் குளம் வெட்டும் சமயம் இவர் மனைவி கர்பவதியாக இருந்தார். குளத்திற்காக. வெட்டியெடுத்த மண்ணை சுமந்து சென்று வெளியே கொட்டிவரும் வேலையை இவர் மனைவி செய்துவந்தார். இதைக்கண்டு அநுதாபப்பட்ட ஸ்ரீநிவாஸன் ஒரு சிறுவன் வடிவத்துடன் அநந்தாழ்வானிடம் சென்று, தானும் குளம் வெட்டும் கைங்கர்யத்தில் பங்குகொள்ள விரும்புவதாகச் சொல்ல, அநந்தாழ்வான், ''நீ அழகிய சிறுவனாய் இருக்கிறாய்'' நீ அணிந்துள்ள ஆபரணங்களையே உன்னால் சுமக்கமுடியாமல் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. விருப்பமானால், வேறுவகையான எளிய கைங்கர்யத்தை செய்து கொள். எங்கள் கைங்கர்யத்தில் பங்கு கேட்காதே என்று சொல்லி அனுப்பிவிட்டார். சிறிது நேரம் கழித்து அதே சிறுவன் அவர் மனைவியிடம் சென்று அவர் சுமந்து வரும் மண்சட்டியை பாதி வழியில் தான் வாங்கிக்கொண்டு சென்று குறிப்பிட இடத்தில் கொட்டிவிட்டு வரலானான் கைங்கர்யம் விரைவாக நடப்பதைக் கண்ட அநந்தாழ்வான் தன் மனைவியிடம் ''குறிப்பிட்ட இடத்தில் மண்ணைக் கொட்டாமல்

http://acharya.org

இடையிலேயே கொட்டிவிடுகிறாயா?'' என்று கேட்க அவர் மனைவி நடந்த உண்மையை உள்ளவாறு உரைத்தாள். இதைக் கேட்ட அநந்தாழ்வான் வெகுண்டு அச்சிறுவனை அடிக்க கையில் கடப்பாரையுடன் துரத்திச் சென்றார். சிறுவன் ஒரு மரத்தின் மேல் ஏறிக்கொண்டு அநந்தாழ்வானைப் பார்த்துச் சொன்னான்:- ''நான் அணிந்துள்ள ஆபரணங்களின் விலை மதிப்பிடமுடியாதது. அவற்றை நான் உமக்கு தந்துவிடுகிறேன். என்னை அடிக்காமல் விட்டு விடுங்கள்'' அநந்தாழ்வான் தலை ஆட்டவே, சிறுவன் கீழே குதித்து வேகமாக ஓடத்தொடங்கினான். அவனைப் பின் தொடர்ந்த ஆழ்வானால் அவனைப் பிடிக்க முடியவில்லை. கையிலிருந்த கடப்பாரையை அச்சிறுவன் மீது வீசினார். சிறுவனும் ஓடிச்சென்று கோவிலுக்குள் நுழைந்து மறைந்தார். மாலை நேர பூஜைக்காக அர்ச்சகர்கள் கதவை திறந்து பார்த்தபொழுது அநந்தாழ்வான் கூறியது போல அங்கே எந்த சிறுவனும் காணப்படவில்லை. ஆனால் கர்பக்ருஹத்திலுள்ள வேங்கடவனின் முகவாய் கட்டையிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருப்பதைக் கண்டு அநந்தாழ்வான் திடுக்குற்று நின்றார். ''எனக்காகவும் என் அடியார்களுக்காகவும் நீர் செய்துவரும் கைங்கர்யத்தில் நானும் பங்குகொள்ள விரும்பினேன் நீரோ அதற்கு ஸம்மதியாமல் கோபத்தில் கடப்பாரையை என் மீது வீசி காயப்படுத்தியதை அதற்குள் மறந்துவிட்டீரா?'' என்று வேங்கடவன் சொல்லக் கேட்ட அநந்தாழ்வான் திருமலையப்பனிடம் மன்னிப்பு வேண்டினார். மூலிகைகளைக் கொண்டுவந்து அடிபட்ட இடத்தில் வைத்து அதன் மேல் பச்சைகற்பூரத்தையும் குழைத்து வைத்து ரத்தக்கசிவை நிறுத்தினார். இந்நிகழ்ச்சியின் நினைவாக, இன்றும் ''ஸ்ரீபாதரேணு'' என்கின்ற பெயரில் பச்சைகற்பூரம் எம்பெருமானின் முகவாய்க்கட்டையில் வைக்கப்படுகிறது.

அநந்தாழ்வான் எறிந்த கடப்பாரை, கோயிலின் நுழைவாயிலில் தொங்கவிடப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

http://acharya.org

ஸ்ரீராமாநுஜரின் திருமலை விஜயம்

ஒரு சமயம் ராமாநுஜர் அநந்தாழ்வானுடன் திருப்பதியிலிருந்து மலையேறத் தொடங்கும்பொழுது கீழ் கண்டவாறு கூறிக்கொண்டே மலை ஏறினார். "வேங்கடவா! பரமபதம் செல்லும் ஜீவன் பரமபதநாதன் ஸிம்ஹாஸன பீடத்தில் கால் வைத்து ஏறுமாபோலே, அடியேனும் பெரியோர்கள் சொற்படி இந்த புனிதமான திருமலையில் கால் வைத்து ஏறி உன்னை வழிபட வருகிறேன். வேதமும் இக்கருத்தைத்தான் அறுதியிடுகிறது!" திருமலையில் கால்படுவதே பாவம் என்று கருதும் எம்பெருமானார் மெதுமெதுவே மலையில் ஏறி "முழங்கால் முறித்தான" வரை சென்றார். அங்கிருந்து தன் பாதங்களை கீழே வைக்காமல் முழுங்கால்களின் பலத்தைக் கொண்டே திருமலையை அடைந்தார். அங்கே அவருடைய தாய்மாமனான பெரிய திருமலை நம்பி கோயில் மரியாதையுடன் இவரை எதிர்கொண்டு அழைக்க வந்தார். இதைக்கண்டு மனம் வருந்தி, "நீர் வரவேண்டுமா? யாராவது சிறியவரை அனுப்பியிருக்கலாமே" என்று கூற, அதற்கு பெரிய திருமலை நம்பி "கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மாட வீதிகளிலும் தேடினேன். என்னை விட சிறியவர் ஒருவரும் காணக்கிடைக்க வில்லை. அதனால் தான் நானே வந்தேன்" என்றார். ராமாநுஜர் அவருடைய விநயத்தை கண்டு வியந்து போற்றினார். கோயிலை நெருங்கியதும் ஜீயர்களும், ஏகாங்கிகளும், மற்றவர்களும் கூடி ராமாநுஜருக்கு மரியாதை செலுத்தினர்.

கோவிந்தேதி ஸதா ஸ்நாநம் கோவிந்தேதி ஸதா ஜபம்
கோவிந்தேதி ஸதா த்யாநம் ஸதா கோவிந்த கீர்த்தனும்

அதரி மஹரிஷி பாண்டவகீதை 47

http://acharya.org

திருவேங்கடவனை வணங்குதல்

ராமாநுஜர் திருக்கோனேரியில் நீராடி, திருமண்காப்பு சாற்றிக்கொண்டு பட்டர்கள் புடைசூழ நான்கு மாட வீதிகளிலும் வலம் வந்தார். அநந்தாழ்வானால் நிர்மாணிக்கப்பட்டு, தன் பெயர் சூட்டப்பட்டுள்ள குளத்தையும், நந்தவனத்தையும் கண்டு மகிழ்ந்த ராமாநுஜர், "அநந்தான் பிள்ளாய்!" என்னுடைய சீடர்களில், உன்னைப் போல், எனக்கும், ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கும் பெருமை சேர்த்தவர் வேறு எவரும் இல்லை", என்று பாராட்டினார். பின்பு அநந்தாழ்வானுடன் ஸ்ரீவராஹப்பெருமாளை ஸேவித்துவிட்டு திருவேங்கட முடையானை மங்களாசாஸநம் செய்யச் சென்றார். பலிபீடத்தையும், த்வஜஸ்தம்பத்தையும் விழுந்து வணங்கிவிட்டு ஆநந்தநிலய விமானத்தின் கீழ் கோயில் கொண்டுள்ள ஸ்ரீநிவாஸப்பெருமாளை பாதாதிகேஶம் ஸேவித்தார். அவர் கண்களுக்கு எம்பெருமான் இந்த்ர நீல ரத்தினம் போலவும், கற்பக வ்ருக்ஷம் போலவும் காணப்பட்டார். உடனே, திருவாய்மொழி "உலகமுண்ட பெருவாயா" பதிகத்தை பக்திபாவத்துடன் தன் சிஷ்யர்களுடன் ஸேவிக்கத் தொடங்கினார்.

உலகம் உண்ட பெருவாயா உலப்பில் கீர்த்தி அம்மானே!
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி நெடியாய் அடியேன் ஆருயிரே!
திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே!
குல தொல் அடியேன் உன பாதம் கூடுமாறு கூறாயே.

திருவாய்மொழி (6-10-1)

திருவேங்கடமுடையானுடைய திருவடிக்கு **"பூவார் கழல்கள்"** (பூ=பூக்கள், ஆர்=நிறைந்த, கழல்கள்=வீரக்கழல் அணிந்த திருவடிகள்) என்றும், பெரிய கோயில் அழகிய

http://acharya.org

மணவாளனுடைய திருவடிக்கு ''திருப்பொலிந்த சேவடி'' என்றும், கச்சி நகர் தேவப்பெருமாளுடைய திருவடிக்கு ''துயரறு சுடரடி'' என்றும் ஸம்ப்ரதாய திருநாமம்.

''உன் திருவடியை விட்டு நீங்காதவன்'' என்கிற காரணத்தினால் அல்லவா ''அடியேன்'' என்று பேர் பெற்றது. ஆகவே. அடியேனாய் இருந்து கொண்டு உன் திருவடிகளை விட்டு அகல்வேனோ நான்.

அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய்!
என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே!
புகல் ஒன்றில்லா அடியேன்
உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

திருவாய்மொழி (6-10-10)

மேற்படி பாசுரத்தை பக்தி பரவசத்துடன் அனைவரும் ஸேவித்து மகிழ்ந்தனர். பெரிய திருமலை நம்பியின் வேண்டுகோளின்படி மூன்று நாட்கள் ராமானுஜர் திருமலையில் தங்கியிருந்தார். மூன்றாம் நாள், பெரியாழ்வாரின் ''திருபல்லாண்டு'' ஸேவித்து தீர்த்தப்ரஸாதம் பெற்றுக்கொண்டு புறப்படும்பொழுது, திருமலையப்பன் ராமாநுஜரிடம் ''எமது தெற்கு வீடான திருவரங்கத்தில் உமக்கும், உம் அடியார்களுக்கும் முன்னமையே நித்ய விபூதியும் லீலா விபூதியும். கொடுக்கப்பபட்டுவிட்டன! இனி கொடுப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்ற கூற. இந்த கம்பீர வாழ்த்து ஒலியைக்

http://acharya.org

கேட்டு, பூரிப்புடன் திருமலையிலிருந்து திருப்பதி வந்தடைந்தார். அங்கு ஒரு வருட காலம் தங்கியிருந்து பெரிய திருமலை நம்பியிடம் ஸ்ரீராமாயண ரஹஸ்யார்த்தங்களை கேட்டு, பின்னர் தன் திருத்தம்பியான எம்பார் என்கிற கோவிந்த பட்டரையும் அழைத்துக் கொண்டு திருமலைக்குச் சென்றார். அங்கு அநந்தாழ்வான் ப்ரதிஷ்டை செய்வதற்காக தயாராக வைத்திருந்த தன்னுடைய விக்ரஹத்தை ஆலிங்கனம் செய்து, ப்ரதிஷ்டை செய்ய அநுமதி தானத்தை வழங்கினார். திருமலை உள் ப்ராகாரத்திலுள்ள ஸ்ரீராமாநுஜர் ஸந்நிதி அநந்தாழ்வானால் நிர்மாணிக்கப்பட்டதே. இவரது பெயரும் புகழும் நாடெங்கிலும் பரவியது. அநேக ஸ்ரீவைஷ்ணவர்கள் இவரை அண்டி அநுக்ரஹம் பெற விரும்பினர்.

ஒரு சிறந்த சீடர் தெற்கு திசையிலிருந்து

திருமலை யாத்திரை செல்லும் அடியார்கள் ''வளர்த்தான் மங்களமுடையான்'' என்னும் சிற்றூரிலுள்ள அதே பெயர்கொண்ட ஸ்ரீவைஷ்ணவரின் இல்லத்தில் சிறிது தங்கி இளைப்பாறிவிட்டு திருமலை செல்லுவது வழக்கம். ஒரு சமயம், ஒரு யாத்திரை கோஷ்டியுடன் வளர்த்தான் மங்களமுடையானும் திருமலை சென்று அநந்தாழ்வானை கண்டு வணங்கி தன்னை சீடனாக ஏற்கும்படி பிரார்த்தித்தார். ஐம்புலன்களை உலக விஷயங்களில் நாடுவதை விட்டு, பகவானிடத்திலேயே ஈடுபடுத்தவேண்டும் என்றும் தன்னிடமுள்ள செல்வத்தை ஸ்ரீவைஷ்ணவ அடியார்களின் தொண்டிற்கே செலவிடவேண்டும் என்கிற அநந்தாழ்வானின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகக் கூறி அவர் சிஷ்யர் ஆனார். அதுமுதல் வளர்த்தான் மங்களமுடையான் ''ஸ்ரீவைஷ்ணவ தாஸன்'' என்கிற தாஸ்ய நாமத்துடன் விளங்கிவந்தார். காலக்ஷேபம் கேட்டுக்கேட்டு அவருடைய பக்தியும் ஞானமும் படிப்படியாக வளர்ந்து வந்தது. நெற்கதிர்

http://acharya.org

முற்ற முற்ற தலைவணங்குமாப்போலே இவருடைய விநயமும், வைராக்யமும் வளர்ச்சி பெற்றன. ஒரு முறை திருமலையிலிருந்து தன் சொந்த ஊரான வளர்த்தான் மங்களத்தானுக்குச் சென்று, தன் சொத்தை மூன்று பாகமாக்கி ஒரு பகுதியை தன் தாய்க்கும், ஒரு பங்கை தன் தந்தைக்கும் தந்துவிட்டு, தன் பாகத்தை ஸ்ரீஅநந்தாழ்வானிடம் பாவகத கைங்கர்யத்திற்கு ஸமர்ப்பித்து தான் வாக்களித்தபடி நடந்து கொண்டு பெருமை பெற்றார். ஸ்ரீ அநந்தாழ்வான் சரமஶ்லோகார்த்தங்களை உபதேஶித்தார். சிறிது நாட்கள் சென்று திருவேங்கடமுடையான் அவரை தன் திருவடிகளில் சேர்த்துக்கொண்டார். ஆசார்யனான அநந்தாழ்வான் தன் சிஷ்யனான வைஷ்ணவ தாஸனுக்கு தானே சரம கைங்கர்யம் செய்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடித்த பாம்பும் கடியுண்ட பாம்பும்

ஒரு சமயம் அநந்தாழ்வான் தான் சமைத்த நந்தவனத்தில் பக்தியுடன் துளசியை கொய்துகொண்டிருந்தார். துளசிச்செடிக்கு அருகிலிருந்த ஒரு பாம்பு அவரது கையைக் கடித்துவிட்டது. கைங்கர்யத்தில் உறுதிபூண்டவரான அநந்தாழ்வான் உடனே சென்று நீராடி, முன்போலவே தளராமல் கைங்கர்யங்களைச் செய்துவந்தார். ''பாம்பின் விஷத்தைப் போக்குவதில் நீர் ஏன் முயற்சிகொள்ளவில்லை?'' என்று அவருக்கு வேண்டியவர்களில் சிலர் கேட்க, அவர், ''கடியுண்ட பாம்பான இந்த ஶரீரம் கடித்த பாம்பைக் காட்டிலும் வலிமையுடையதாயிருந்தால் கோனேரியில் நீராடி, திருவேங்கடமுடையானை உங்களோடு கூட ஆர்வத்தோடு ஸேவித்துக்கொண்டு இங்கு வாழ்கிறேன். கடித்த பாம்பு வலிமை பெற்றதாயிருந்தால், விரஜையில் நீராடி, ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கிறேன்'' என்று அமைதியாக பதிலுரைத்தார்.

http://acharya.org

ஆண்டவன் கட்டளையும் ஆசார்யன் கட்டளையும்

ஒரு நாள் அநந்தாழ்வான் யமுனைத்துறைவர் மண்டபத்தில் பெருமாளுக்கு பூமாலை தொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு அர்ச்சக ஸ்வாமி அவரிடம் வந்து, ''ஸ்ரீநிவாஸப்பெருமாள் உம்மை அவசரமாக அழைக்கிறார். கிளம்பும்'' என்று கூற. அநந்தாழ்வான் உடனே கிளம்பிபோகாமல், மாலை கட்டி முடிந்தவுடன், மாலையையும் எடுத்துக்கொண்டு கர்ப க்ருஹம் சென்றார். அவரைக் கண்டவுடன், திருமலையப்பன், ''சற்று முன் என்னால் அழைக்கப்பட்ட தேவரீர் ஏன் இங்கு வரவில்லை?'' என்று கேட்க, அதற்கு அநந்தாழ்வானும் ''எம்பெருமானே! உம்மைக்கொண்டு எனக்கு இப்பொழுது என்ன காரியம் உள்ளது? ஆசார்ய நியமனத்தாலே செய்யப்படும் மாலை தொடுத்தல் போன்ற கைங்கர்யமே மிக முக்கியமாக கருதுகிறேன் என்று பதிலளித்தார். இதைக்கேட்ட திருவேங்கடமுடையான் அநந்தாழ்வானைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு ''இந்த மலையைவிட்டு தேவரீர் என்னால் ''வெளியேற்றப்பட்டீரானால் உம்மால் என்ன கார்யம் செய்யமுடியும்?'' என்று கேட்க, அநந்தாழ்வான், ''எம்பெருமானே! அடியார்களிடம் அன்பாலே தேவரீரும் திருமலைக்க வந்தவரே. ஆசார்யன் ஆனையாலே பக்தியோடு. இங்கு வந்தவன் நான். இவ்வண்ணமாக நாம் இருவரும் திருமலைக்கு வந்தேறிகள். வந்தேறிகளில் ஒருவரான தேவரீர் மற்றொரு வந்தேறியான என்னை எப்படி திருமலையை விட்டு வெளியேற்ற முடியும்?'' என்று பதில் கூறி, திருவேங்கட முடியான் வாய்திறக்க வழியில்லாதபடி செய்தார்.

இப்படி திருவேங்கடமுடையான் தன்னிடம் அதிப்ரீதியுடன் இருக்கக் காரணம் என்னாவயிருக்கலாம் என்று சிந்தித்து, தன் ஆசார்ய பக்தியே இதற்குக் காரணம் என்று

http://acharya.org

உணர்ந்தார். ஆசார்யபக்திக்கு ப்ரஸித்தரான ஸ்ரீமதுரகவி ஆழ்வாரை எடுத்துக்காட்டாய் கொண்டு தன் சிஷ்யர்களையும், வம்ஶத்தவர்களையும் ''மதுரகவி தாஸர்கள்'' என்றே கூறிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

தோட்டத்தில் தூய்மைக்கேடு

ஒரு வஸந்த ருதுவின் ஒன்பதாம் நாளில் ராமானுஜ நந்தவனத்தில் ஆங்காங்கே புஷ்பங்களும், கனிகளும் சிதறிக்கிடப்பதைக் கண்டு திடுக்கிட்ட அநந்தாழ்வான், நந்தவனத்திற்குத் தூய்மைக் கேட்டை விளைவித்தவரை கையும் களவுமாகப் பிடிக்கத் தீர்மானித்தார். அன்று இரவுப்பொழுது மறைந்திருந்து கண்காணித்து வந்தார். நடு இரவில், ராஜகுமாரன், ராஜகுமாரி போல் காணப்பட்ட இருவர் உல்லாஸமாக உலவிவருவதைக்கண்டு ஆச்சரியப்பட்டார். அவர்கள் தான் தோட்டத்தூய்மைக்கேட்டிற்குக் காரணமாய் இருக்க வேண்டும் என்று நிச்சயித்து, அவர்களை பிடிக்க முயன்ற பொழுது, ராஜகுமாரன் காற்றில் கடியனாய் ஓடித்தப்பிவிட்டான் ராஜகுமாரி அநந்தாழ்வான் கையில் பிடிப்பட்டாள். ''மஹாலக்ஷ்மியைப் போல் இருக்கும் நீ யார்? இப்புனித தோட்டத்திற்கு கேடு விளைவிப்பது நியாயமா? உன் கூட வந்தவர் யார்'' என்று அநந்தாழ்வான் கேட்டார். அதற்கு அவள் நான் உங்கள் மகள் போன்றவள். நான் எந்த தவறும் செய்யவில்லை. நானும் என் கணவரும் இந்த பிராந்தியத்தில் ஆதிக்யம் உள்ளவர்கள். எனவே, சுதந்திரமாக அவர் இஷ்டப்படி எங்குவேண்டுமானாலும் ஸஞ்சரிப்பது வழக்கம். இந்த தூய்மைக் கேட்டிற்கு அவர்தான் காரணம். நான் பொறுப்பாளி அல்ல. ஆகையால் குற்றமற்ற என்னை தங்கள் மகள் போல் பாவித்து விடுவியுங்கள்'' என்றாள் ''அப்படியானால் உன் கணவர் பெயர் என்ன என்று சொல்லுவாய்'' என்றார் அநந்தாழ்வான். ''தர்மபத்னிகள் தங்கள்

http://acharya.org

பர்த்தாவின் பெயரை சொல்லக்கூடாது என்கிற நியதி தாங்கள் அறியததா?'' என்று அவள் கூற, அநந்தாழ்வான் காலையில் உன் கணவர் உன்னைத் தேடிக்கொண்டு எப்படியும் வருவார். அப்பொழுது அவரிடமிருந்து நஷ்டஈடு பெற்றுக்கொண்டு உன்னை விடுதலை செய்கிறேன்.'' என்று கூறி அவளை அருகில் இருந்த சம்பக மரத்தில் கட்டிவைத்து தானும் காலை வரையில் காவல் காத்து வந்தார்.

பொழுது புலர்ந்ததும், அர்ச்சகர்கள் ஸந்நிதி திருக்காப்பு நீக்கியவுடன் பெருமாள் திருமார்பிலுள்ள அலர்மேல் மங்கைத் தாயாரின் உருவம் கொண்ட சிறிய தங்கப் பேழையைக் காணாது திகைத்துநிற்க, திருவேங்கடவனே ஒரு அர்ச்சகர் வாயிலாக அநந்தாழ்வானால் கட்டிவைக்கப்பட்டிருந்த பிராட்டியை விடுவித்து அநந்தாழ்வானையும் அழைத்துவர உத்தரவிட, அர்ச்சர்களும் விரைவில் சென்று அநந்தாழ்வானிடம் வேங்கடவனின் கட்டளையை அறிவித்தனர். தான் செய்த அபசாரத்தை எண்ணி வருந்தி, பிராட்டியிடம் மன்னிப்பு வேண்டி, கட்டுக்களை விரைவாக அவிழ்த்துவிட்டு தானும் கர்ப்பக்ருஹம் நோக்கி சென்றார். கர்ப்க்ருஹம் சென்றவுடன் காணாமல் போன அலமேலுமங்கை தாயார் உருவம் பதித்த சிறு தங்கப் பேழை பெருமாளின் மார்பில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால் அநந்தாழ்வான் அழைத்து வந்த தாயாரைக் காணவில்லை இந்த அதிசய நிகழ்ச்சியே ஸ்ரீ அநந்தாழ்வான் ஸ்ரீநிவாஸனுக்கு மாமனாராகக் கருதப்படுவதற்கு காரணமாகிறது. மாப்பிள்ளையான ஸ்ரீநிவாஸன் மாமனாரான் அந்தாழ்வானுக்கு கன்யா ஶுல்கமாக ஒரு மாலையை அளித்தார். மாமனாரான அநந்தாழ்வான் ப்ரதிஸம்பாவனையாக பட்டுபீதாம்பாத்தை ஸ்ரீநிவாஸனுக்கு வழங்கினார். இப்பவும் புரட்டாசி மாதம், ப்ரஹ்மோத்ஸவத்தின் எட்டாம் திருநாளன்று இந்நிகழ்ச்சியின் நினைவாக திருமைல அப்பனுக்கு அநந்தாழ்வான்

http://acharya.org

வம்சத்தவரால் பட்டு பீதாம்பரம் ஸமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் அநந்தாழ்வான் வாழி திருநாமத்தில் ''மலையில் வேங்கடவற்கு மாமனார் வாழியே'' ''அலர்மேல் மங்கை திருவுக்கு அப்பனார் வாழியே'' என்று இன்றும் ஓதப்பட்டுவருகிறது.

துவாபர யுகத்தில் கண்ணபிரான் யசோதா பிராட்டியாரால் உரலில் கட்டுண்டார். கலியுகத்தில் அலமேலுமங்கா தாயார் ராஜகுமாரி வடிவத்தில் அநந்தாழ்வானால் சம்பக மரத்தில் கட்டுப்பட்டார்! என்னே பக்தியின் பெருமை.

எம்பெருமான் பொன்மலையில் எறும்புகள்

திருமலையப்பனிடம் விடைபெற்றுக் கொண்டு அநந்தாழ்வான். தென் திசை யாத்திரை மேற்கொண்டார். ஸ்ரீவரதாசார்ய பாகவதரும், சில சீடர்களும் உடன் சென்றனர். வழியில் ஒரு ஆற்றங்கரையில் தன்னுடன் கொண்டுவந்த ப்ரஸாத மூட்டையை அவிழ்த்த பொழுது பல எறும்புகள் தென்பட்டன. உடனே அவருக்கு குலசேகராழ்வாரின் திருலையப்பன் விஷயமான பாசுரம் நினைவுக்கு வந்தது.

உம்பர் உலகாண்டு ஒரு குடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொன் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயான் திருவேங்கடம் என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே.

பெருமாள் திருமொழி IV-10

இந்த எறும்புகள் எல்லாம் பூர்வ ஜன்மத்தில் பக்தர்களாயிருந்து இந்த ஜன்மத்தில் திருமலையில் எறும்புகளாக பிறந்திருக்கின்றன. இவைகள் திருமலையில் இருக்கவேண்டியவை என்று நினைத்து ப்ரஸாதமூட்டையை

http://acharya.org

அப்படியே திருமலைக்கு எடுத்துச் சென்று விட்டு, மறுநாள் யாத்திரையை தொடர்ந்தார்.

மேல்கோட்டை திருநாராயணபுரத்தில்

ஒரு தடவை அநந்தாழ்வான் தன் சீடர்களுடன் மேல்கோடை திருநாராயணபுரம் சென்றிருந்தார். அங்கும் அவர் திருவேங்கடமுடையானையே நினைத்துக் கொண்டிருந்தார். அத்திருத்தலத்து எம்பெருமானான திருநாரணனும் அவருக்கும் அவருடைய சீடர்களுக்கும் திருவேங்கடமுடையானாகவே காட்சி அளித்தார். அனைவரும் அநந்தாழ்வானின் பக்தியைக்கண்டு வியப்படைந்தனர். இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் வகையில், இப்பவும் ஏகாதசி தினங்களிலும், மற்றும் ஆழ்வானின் திருநக்ஷத்திரமான சித்திரை நக்ஷத்திரங்களிலும் திருநாராணனை திருவேங்கடமுடையானாகவே அலங்கரிக்கின்றனர்.

கேரள விஜயம்

வாதாசாரியர் கோஷ்டியுடன் அநந்தாழ்வான் கேரளம் சென்று ஸ்ரீராமாநுஜரின் கொள்கைகளை உபதேசித்து அதன் மூலம் புதிய சீடர்கள் ஏற்பட்டனர். திருமலைக்கு திரும்பி வரும் வழியில் பசிமேலீட்டால் களைப்பு உண்டாயிற்று சிறிது நேரம் ஓய்வு எடுத்தனர். அப்பொழுது ஒரு ப்ரஹ்மசாரி அவர்களிடம் வந்து இது திருமலையப்பன் ப்ரஸாதம் என்று சொல்லி தயிர் சாதத்தை விநியோகித்து விட்டு, தானும் சிறிது உண்டுவிட்டு மறைந்துவிட்டான். அப்பொழுது வேங்கடவனே நேரில் வந்து தங்கள் பசியைப் போக்கியதாகக் கருதி சீடர்கள் மகிழ்ந்தனர்.

செண்பக மரத்தின் செயல் திறன்

அநந்தாழ்வானுக்கு பல செல்வந்தர்கள் சீடர்களாயிருந்தார்கள். அவர்களின் உதவிகொண்டு புதிதாக

http://acharya.org

மண்டபங்களும், கோபுரங்களும் கட்டினார். ஒரு சமயம் சுவர் எழுப்பிக்கொண்டு வரும்பொழுது ஒரு சண்பகமரம் இடையே தடைப்பட்டது. அம்மரத்தை வெட்டி அப்புறத்தப்படுத்த வேண்டும் என்று கட்டிடத் தொழிலாளர்கள் சொன்னார்கள். ஆனால் அநந்தாழ்வான் அதற்கு உடன்படவில்லை.

ஒண்பவள வேலை உலவு திண் பாற்கடலுள்
கண் துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண்கரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து
செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே.

பெருமாள் திருமொழி IV-4

ஜங்கமமான ஒரு பிறப்பு வேண்டும் என்பதில்லை திருவேங்கட மலையில் இருப்பு நேரும்படியாக அங்கு நிற்பதொரு ஸ்தாவரமாயினும் நான் ஆகவேண்டும் என்று குலசேகராழ்வார் விரும்பினார். புஷ்ப கைங்கர்யத்திற்கு உபயோகப்படுவதான மரத்தை எப்படி வெட்டுவது.

மேலும், பலவகைப் புஷ்பங்களுள் செண்பக மலர் எம்பெருமான் திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பாதலை பெரியாழ்வார் பூச்சூட்டல் திருமொழியில் ''தேனில் இனிய பிரானே செண்பகப்பூச்சூட்டவாராய்'' என்று இதனை முதலில் கூறியுள்ளார்.

ஆநிரை மேய்க்க நீ போதி அருமருந்தாவதறியாய்
கானகமெல்லாம் திரிந்து உன் கரிய திருமேனி வாடப்
பானையில் பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாம் சிரிப்பத்
தேனில் இனிய பிரானே! செண்பகப்பூச் சூட்டவாராய்

பெரியாழ்வார் திருமொழி II-7-1

http://acharya.org

அநந்தாழ்வான் அம்மரத்திடம் சென்று ''சுவர் கட்ட வழி விடும்படி'' மனமுருக வேண்டினார். அவ்வாறே திருமலை அப்பனிடமும் வேண்டுகோள் விடுத்து கண்ணீர் விட்டார். அவருடைய பிரார்த்தனைக்கிணங்க அம்மரமும் சற்றே விலகி வழிவிட்டிருந்ததைக் கண்டு கட்டிடத்தொழிலாளர்கள் உள்பட அனைவரும் வியப்படைந்தனர். இப்பொழுதும் அந்த பிரகாரம் ''செண்பக பிராகாரம்'' என்கிற பெயருடன் விளங்குகிறது.

புலிக்கும் பரமபதம்

ஒரு நாள் அநந்தாழ்வான் வழக்கம்போல் ஸ்வாமி புஷ்கரணியில் நீராடிவிட்டு கரை ஏறும்பொழுது அங்குள்ள அரசமரத்திலிருந்த ஒரு புலியின் காதில் அவருடைய மேல் அங்கவஸ்த்ரம் சிக்கிக்கொண்டது. அதை எடுக்க அவர் முயற்சித்தபொழுது, அவருடைய சீடர்கள் ''அப்படிச்செய்ய வேண்டாம். அது இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுபட உம்முடைய ஆசியை எதிர்பார்க்கிறது.'' என்று கூறினார்கள் அநந்தாழ்வானும் அப்படியே ஆசீர்வதித்தார். பின்பு, அவர்கள் தோட்டத்திற்கு திரும்பிப்போகும்பொழுது வழியில் அப்புலி இறந்து கிடந்ததைக் கண்டார்கள். அநந்தாழ்வானின் சீடர்கள் அதற்குண்டான ஈமச்சடங்குகளை செய்தார்கள். பிறகு அவர்கள் கர்பக்ருஹம் சென்று பெருமாளை ஸேவித்தபொழுது, மூலஸ்தானத்தில் புலியின் வடிவத்தைக் கண்டு அதிசயப்பட்டனர். வேங்கடவனும் அநந்தாழ்வானைப் பார்த்து ''புலிக்குக்கூட பரமபதம் கொடுக்கத் தொடங்கி விட்டீர்போலத் தெரிகிறதே. தேவர்களாலும் செய்ய முடியாத செயல் ஆயிற்றே அது. எனக்கு இனி இங்கு வேலை ஏதும் இல்லை என்று நினைக்கிறேன்'' என்று வேடிக்கையாகச் சொன்னார். ''தேவரீர் க்ருபையாலேயேதான் புலிக்கு பரமபத ப்ராப்தி. அடியேனைச் சேர்ந்தவர்களுக்கும் தேவரீரே க்ருபை செய்து வருகிறீர்'' என்று சொல்லி பெருமாளை ஸேவித்தார் அநந்தாழ்வான்.

http://acharya.org

அநந்தாழ்வான் திருமாளிகைக்கு வேங்கடவன் எழுந்தருளல்

ஒரு சமயம் ஜுரத்தால் பீடிக்கப்பட்டு, கைங்கர்யம் செவ்வனே செய்ய முடியாமல் போயிற்று அநந்தாழ்வானுக்கு. அவருடைய உதவிக்கு சில வைத்தியர்களையும் அர்ச்சகர்களையும் ஸ்ரீநிவாஸன் அநந்தாழ்வான் திருமாளிகைக்கு அனுப்பி வைத்தார். ''மூன்றாம் மனிதரை நோயை குணப்படுத்த அனுப்பிவைப்பது அழகா? ஆளிட்டு அந்தி தொழுவது முறையோ?'' என்று சொல்லி அவர்களை திருப்பி அனுப்பிவிட்டார் அநந்தாழ்வான். அவர்களும் பெருமாளிடம் சென்று நடந்தவற்றை கூறினார்கள். இதைக் கேட்ட கருணை உள்ளம் கொண்ட வேங்கடவன் தானே உடனே அநந்தாழ்வான் இல்லத்திற்கு விரைந்தார். அவரிடம் க்ஷேமம் விசாரித்தார். அநந்தாழ்வானோ பதில் பேசாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். ''உம்முடைய மௌனத்திற்குக் காரணம் நோயா? அல்லது கோபமா?'' என்று பெருமாள் கேட்டுவிட்டு அவரை தொட்டுப் பார்த்தார். வேங்கடவனின் க்ருபா கடாக்ஷத்தாலும் திருக்கர ஸ்பர்ஶத்தாலும் அநந்தாழ்வாள் குணமடைந்தார். படுக்கையை விட்டு எழுந்திருந்து நின்றுகொண்டு தன் மௌனத்திற்கு மன்னிப்பு வேண்டினார். ''செய்த பாவத்திற்கு பரிஹாரமாக வரும் உடல் உபாதிகள் புதியது அல்லவே! இயற்கை தானே! ஆயிரம் ஆண்டுகள் கடும் தவம் புரிந்தும் போக்கமுடியாத பாபத்தை நீர் கணப்பொழுதில் போக்க வல்லீரல்லீரோ? என்று சொல்லி விழுந்து வணங்கினார்.''

தனியனின் தனிச்சிறப்பு

ஒரு சமயம், ஸ்ரீரங்கத்திலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலை யாத்திரை மேற்கொண்டார்கள். மலை ஏறிவரும்பொழுது அவர்களுக்கு சிறிது சோர்வு ஏற்பட்டது. அப்பொழுது, ஒரு சிறுவன் அவர்களிடம் வந்து

http://acharya.org

''கோயிலிலிருந்து ப்ரஸாதம் கொண்டுவந்திருப்பதாயும், அதை ஸ்வீகரித்து களைப்பாறும்படி வேண்டினான் ப்ரஸாதத்தை பெற்றுக்கொள்ளுவதற்கு முன்னர், அவனுடைய ''ப்ரவரம்'' சொல்லும்படி சொன்னார்கள். அதற்கு அச்சிறுவன் தான் ஸ்ரீஅநந்தாழ்வானின் சீடன் என்றும் தன் பெயர் ஸ்ரீநிவாஸன், என்றும் மதுரகவி தாஸன் என்கிற தாஸ்ய நாமத்தையும் சொன்னான். அதுமட்டுமல்லாமல், ஸ்ரீஅநந்தாழ்வான் தானே கோயிலிலிருந்து ப்ரஸாதம் கொடுத்தனுப்பியதாகவும் கூறினான். இதைக்கேட்டும் த்ருப்தி அடையாத ஸ்ரீவைஷ்ணவர்கள் அச்சிறுவனிடம் தன் ஆசார்யன் தனியனை சொல்லும்படி நியமித்தனர். உடனே அவனும்

அகிலாத்ம குணாவாஸம் அஜ்நாத திமிராபஹம் **ஆஶ்ரிதாநாம் ஸுஶரணம் வந்தே அநந்தார்ய தேஶிகம்**

என்கிற தனியனை ஸேவிக்க

இதன் பொருள்

ஆத்ம குணங்கள் அனைத்திற்கும் இருப்பிடமானவரும், அஜ்ஞான இருட்டை அடியோடு அகற்றுபவரும், அடியார்களுக்கு தஞ்சமாய் இருப்பவருமான அநந்தாழ்வானை அடிபணிகிறேன்.

அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ''ஆசார்ய ஸம்பந்தம் இல்லாத ஒரு தனியனை எப்படி தனியன் என்று ஏற்றுக்கொள்ளுவது''. என்று சொல்ல, உடனே அச்சிறுவன் பின் வருமாறு கூறினான்: எங்கள் ஆசார்யனுக்கு இரண்டு தனியன்கள் உண்டு. ஒன்று அவருடைய குணாதிசயத்தையும், பெருமையையும் போற்றிப் பேசுவது. மற்றது அவருடைய ஆசார்ய ஸம்பந்தத்தை சொல்லுவது. அந்த இரண்டாவது தனியனை ஸேவிக்கிறேன். கேளுங்கள்

http://acharya.org

ஸ்ரீமத் ராமாநுஜாசார்ய ஸ்ரீபாதாம்போருஹ த்வயம்
ஸதுத்தமாங்க ஸந்தார்யம் அநந்தார்யம் அஹம் பஜே

இதன் பொருள் :

ஸ்ரீராமாநுஜாசாரியருடைய திருவடித்தாமரை இணையை அநவரதமும் தன் தலையில் தாங்கி நிற்கின்ற அநந்தாழ்வானை அடிபணிகின்றேன்.

இதைக் கேட்டு த்ருப்தியடைந்த அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் மகிழ்ச்சியுடன் ப்ரஸாதத்தை ஸ்வீகரித்துக் கொண்டனர். களைப்பு நீங்கி மலை ஏறினர். மலையில், அநந்தாழ்வானுக்கு சிறுவன் மூலம் ப்ரஸாதம் அநுப்பிவைத்தற்கு நன்றி தெரிவித்தனர். தான் ஒருவரையும் ப்ரஸாதத்துடன் அனுப்பிவைக்காததால் ஸ்ரீஅநந்தாழ்வான் வியப்புற்றார். வேங்கடவனே ப்ரஹ்மசாரி சிறுவனாகச் சென்றிருக்கவேண்டும் என்று ஊஹித்து அவர் ஸ்ரீவைஷ்ணவர்களை நடந்ததை விளக்கிக்கூறுமாறு வேண்டினார். அவர்களும் நடந்ததை முழுமையாகச் சொன்னார்கள். அன்று முதல் திருமலையிலுள்ள ஸ்ரீராமாநுஜர் ஸந்நிதியிலிருக்கும் ஸ்ரீஶடாரிக்கு ''அநந்தாழ்வான்'' என்றே பெயர் பெற்று அழைக்கப்பட்டுவருகிறது.

ஸ்ரீராமாநுஜரின் மறைவு

அநந்தாழ்வான் ஸ்ரீராமாநுஜரையே ஸதா ஸர்வ காலமும் நினைத்துக்கொண்டும், அவர் இட்ட கட்டளையை செயல்படுத்துவதை சிந்தித்துக்கொண்டும் இருந்தார். அவர் விரும்பியபடி வருஷம் முழுவதும் நாலாயிர திவ்ய பிரபந்த பாடல்களை கோயிலில் ஸேவிப்பதற்கு ஏற்பாடு செய்தார். ராமாநுஜரின் பரமபத ப்ராப்தி அவருக்கு எவ்வித அதிர்ச்சியை கொடுத்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். ஒரு வருட

http://acharya.org

காலம் அவர் ஸ்ரீநிவாஸப் பெருமாளை ஸேவிக்கவே இல்லை. ஸ்ரீநிவாஸரும் அவரைக் காணாமல் வருந்தி அர்ச்சகர் மூலம் ஸமாதானம் சொல்லி அனுப்பினார்.'' அவரை விட திருப்பதி, காஞ்சி, ஸ்ரீரங்கம், மேலக்கோட்டை திருநாராயணபுரம் எம்பெருமான்களுக்குத்தான் அதிக வருத்தமாயிருக்கும் என்று கூறியதோடு நில்லாமல் ராமாநுஜருடைய ஸ்தானத்தை ஏற்று அவரைப்போல் வைஷ்ணவ ஸமூஹத்திற்கு தொண்டு செய்யும்படி வேண்டினார்.

அநந்தாழ்வான். திருமலையப்பனுக்கு ராமாநுஜர் செய்த உதவிகளை நினைவுபடுத்தினார். அவருக்கு சங்கு சக்கரங்களைக் கொடுத்து அவர் திருமாலே என்று நிலைநாட்டி புகழ் சேர்த்ததையும், ''ஸ்ரீபாஷ்யம்'' தனியன் மூலம் ஸ்ரீநிவாஸனுக்கு

> அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே
> விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே ।
> ஶ்ருததி ஶிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
> பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்தி ரூபா ॥

பெருமை தேடித்தந்தனையும் குறிப்பிட்டார். அத்யயன உத்ஸவத்தில் நாலாயிர திவ்ய பிரபந்தம் ஸேவிக்கப்பட்ட பின் ஒரு நாள் ''ப்ரபந்ந காயத்ரி'' என்று போற்றப்படும் ஸ்ரீ அமுதனார் அருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதியை ஸேவிக்கவேண்டும் என்கிற கோரிக்கையை ஸ்ரீநிவாஸனிடம் அநந்தாழ்வான் ஸமர்ப்பித்தார். அவருடைய வேண்டுகோளின்படி, இப்பொழுதும் அத்யயன உத்ஸவகாலத்தில் கர்பக்ருஹத்தில் ''கண்ணிநுண் சிறுத்தாம்பினால்'' பதிகம் ஸேவித்தபின்னர் ''ராமாநுஜ நூற்றந்தாதி'' ஓதப்பட்டு வருகிறது. என்னே! அநந்தாழ்வானின் ஆசார்ய பக்தி!

http://acharya.org

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்கள்

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராமாநுஜருக்குப் பின் கூரத்தாழ்வானின் திருக்குமாரரான ஸ்ரீபராஶரபட்டர் ஆசார்ய பீடத்தை அலங்கரித்துவந்தார். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அவரிடம் ''வைஷ்ணவர்களிடம் அவசியம் இருக்கவேண்டிய முக்கிய பண்புகள்'' பற்றி அறிய விரும்பினார். அதற்கு ஸ்ரீபராஶர பட்டர் நேரிடையாக பதிலளிக்காமல் ''திருமலையிலுள்ள அநந்தாழ்வானிடம் கேட்டு தெரிந்து கொள்ளும்படி கூறினார். அந்த ஸ்ரீவைஷ்ணவரும் திருமலை சென்று அநந்தாழ்வானை அணுகி விவரத்தை கூறினார். அநந்தாழ்வானும் அவரை அங்கு ஆறு மாதகாலம் எதுவும் சொல்லாமல் தங்க வைத்துக்கொண்டார் ஒரு சமயம் தன் திருமாளிகையில், அநந்தாழ்வான் வைஷ்ணவ ததீயாரதனத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். பல அடியார்கள் ததீயாராதனத்தில் அந்வயிக்க வந்திருந்தார்கள்.

அநந்தாழ்வான் ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த ஸ்ரீவைஷ்ணவரை'' முதல் பந்தியில் உட்கார்ந்துகொண்டு உணவு உட்கொள்ள வேண்டாம். இரண்டாம் பந்தியில் பங்கு கொள்ளலாம் என்று நியமித்தார். ஆனால் இரண்டாம் பந்தியிலும் அவரை உட்காரவிடாமல் மூன்றாம் பந்தியில் அமரலாம் என்று கூறி அநந்தாழ்வான் அந்த ஸ்ரீவைஷ்ணவரின் முகத்தை கூர்ந்து கவனித்தார். அந்த ஸ்ரீவைஷ்ணவர் முகத்தில் எவ்வித மாற்றமோ, கோபமோ இல்லாதிருப்பதைக் கண்டு வியந்து, இவரே உபதேஶம் பெறுவதற்குத் தகுதியானவர் என்று தீர்மானித்து ஸ்ரீவைஷ்ண லக்ஷணங்கள் குறித்து கீழ் வருமாறு கூறினார். ''கொக்குபோல் இருப்பான், கோழி போல் இருப்பான்; உப்பு போல் இருப்பான்; உம்மைப் போலிருப்பான்'' இதன் விளக்கம் ஸ்ரீபராஶர் பட்டர் ஸ்ரீரங்கத்தில் அருளிச்செய்வார் என்று சொல்லி, அந்த

http://acharya.org

ஸ்ரீவைஷ்ணவருக்கு விடைகொடுத்து அனுப்பிவைத்தார். ஸ்ரீபராஶரபட்டர் அளித்த விளக்கம் வருமாறு.

1) கொக்கு எப்பொழுதும் நதி, குளம், ஏரி போன்ற ஜலம் மிகுதியான இடங்களில் காணப்படும். அதுபோல ஸ்ரீவைஷ்ணவர்களும் நீர் நிறைந்த இடங்களிலேயே தங்கள் இருப்பிடத்தை அமைத்துக்கொள்வார்கள். கொக்கின் நிறம் வெண்மை. அதே போல், ஸ்ரீவைஷ்ணவர்களும் உடலையும் உள்ளத்தையும் மிகத்தூய்மையாக வைத்திருப்பார்கள். வெண்ணிற ஆடையையே அணிவார்கள். (ஶுத்த ஸத்வம்) கொக்கு எவ்வாறு சிறிய மீன்களை நாடாமல், பெரிய மீன்களுக்கு வாடி இருப்பது போல, ஸ்ரீவைஷ்ணவர்களும் சிறு சிறு தெய்வங்களை தொழாமல் ஸர்வஸ்மாத் பரனான ஸ்ரீமந்நாராயணனின் அநுக்ரஹத்திற்காகவே தவம் கிடப்பார்கள்.

2) கோழியைப்போல, அதிகாலையில் (ப்ரஹ்ம முஹூர்த்தம்) துயிலெழுந்து, மற்றவர்களையும் எழுப்பிவிடுவார்கள். கண் விழித்தவுடன் கோழி கூவுவதைப் போல, ஸ்ரீவைஷ்ணவனும் எழுந்தவுடன் பிறர் காதுபட தோத்திரங்களையோ அல்லது ஆழ்வார்களின் திவ்ய பிரபந்த பாடல்களையே ஓதுவார்கள். கோழி குப்பையைக் கிளறி, அதிலிருந்து தானியங்களை மட்டும் பிரிந்து எடுத்து தானும் உண்டு தன் குஞ்சுகளுக்கும் கொடுப்பது போல், ஸ்ரீவைஷ்ணவனும் அஸாரம், அல்ப ஸாரம், ஸாரம், ஸாரதர மான நூல்களை கழித்து ஸாரதமமான நூல்களையே கற்றும், மற்றவர்களுக்கும் கற்பிப்பார்கள்.

தளிகை செய்யப்படும் பண்டங்களில் உப்பு சேர்க்கப்படும் போது, சிலவற்றில் உப்பு அதிகமாக விழுவதுண்டு. சிலவற்றில் குறைவாக விழுவதுண்டு. சிலவற்றில் ஸமமாக (ஏற்றதாழ்வு இல்லாமல்) விழும். அதிகமாக விழுந்தால், ''ஒரே உப்பு'' என்று ஓலமிடுவார்கள்.

http://acharya.org

உப்பு குறைவாய் இருந்தால், ''உப்பிலி அப்பன் ப்ரஸாதம்'' என்று கேலியாக கூறுவார்கள். உப்பு ஸமமாக இருந்தாலோ, உப்பைப்பற்றிய ப்ரஸ்தாவமே வருவதில்லை பொதுவாகத் தளிகை நன்றாயிருக்கிறது என்று சொல்லுவேணுமானால் உப்பு, புளி, காரம் மூன்றும் திட்டமாயிருக்க வேண்டும். உப்பைப்பற்றிய பேச்சே வர வாய்ப்பில்லை அதேபோல், பெரியோர்கள் குழாத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் கலக்கும் பொழுது, தன்னைப்பற்றிய பேச்சு நிகழாதிருக்கும்படி (அதாவது) தான் இருப்பது தெரியாமல் அடங்கி, ஒடுங்கி இருக்கவேண்டும்.

4) அநந்தாழ்வான் திருமாளிகையில் நடைபெற்ற வைஷ்ணவ ததீயாராதந்தில் உமக்கு உரிய மரியாதை கொடுக்கப்படாமல் அவமரியாதை இழைக்கப்பட்டபொழுது, நீர் எவ்வித சலனமும் அடையாமலும், கோபப்படாமலும் ''ஸம துக்க ஸுக க்ஷமி'' என்கிற கீதாசாரியனின் கொள்கையை கடைப்பிடித்த காரணத்தால் உம்மைப்போல் இருப்பார் என்று சொல்லியுள்ளார். ஆகவே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அஹங்கார, மமகாரங்களை விட்டு, கோபப்படாமலும், பணிவன்புடன் இருப்பார் என்று மறைமுகமாகக் கூறியுள்ளார்.

ஸ்ரீபராஶர பட்டரும் ஸ்ரீநஞ்ஜீயரும்

மேல்கோட்டை திருநாராயணபுரத்தில் ஒரு மெத்தப் படித்த வேதாந்தி பிரபலமாக விளங்கிவந்தார். அவருடைய புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. தன்னுடைய வயதான காலத்தில் இவரைப்பற்றி கேள்வியுற்ற ஸ்ரீராமானுஜர் இவரை ஒரு சிறந்த வைஷ்ணவ ஶிகாமணியாக மாற்ற விரும்பினார். இதற்கு சரியான ஸந்தர்பம் கிடைக்கவில்லை. ஆனால் தன் கருத்தை ஸ்ரீபராஶர பட்டரிடம் தெரிவித்திருந்தார். ஸ்ரீஅநந்தாழ்வான் தென்னாட்டு யாத்திரை மேற்கொண்டபோது, தன் சொந்த ஊரான சிறுபுத்தூருக்குச்

http://acharya.org

சென்றிருந்தார். அப்பொழுது ஸ்ரீபராஶர பட்டர் அவரை சந்தித்து, மேல்கோட்டையில் வேதாந்தியை வாதத்தில் வெல்லுவதற்காக தான் மேல்கோட்டை செல்லுவதாகவும், அதற்கு தன்னை ஆசீர்வதிக்கும்படியும். ஸ்ரீஅநதாழ்வானிடம் வேண்டினார்.

அநந்தாழ்வானும் ஸ்ரீபராஶர பட்டருடன் மேல்கேட்டை சென்றார். பல நாட்கள் வாதப்போர் நடைபெற்றது. முடிவில் ஸ்ரீபராஶரபட்டர் வாதப்போரில் வெற்றிபெற்றார். பின்பு ஸ்ரீபராஶர பட்டர் ஸ்ரீரங்கம் திரும்பும் பொழுது ஸ்ரீ அநந்தாழ்வானை அவருடைய ஊரான சிறுபுத்தூரில் விட்டுவிட்டு வந்தார். பின்பு வேதாந்தி ஸந்யாஸ ஆஶ்ரமம் மேற்கொண்டு, தன்னுடைய சொத்தை மூன்று பாகங்களாகப் பிரித்து, இரண்டு பாகங்களை தன்னுடைய இரண்டு மனைவிகளுக்கும் கொடுத்துவிட்டு, மூன்றாவது பாகத்தை தன்னுடைய ஆசார்யரான ஸ்ரீபராஶர பட்டரிடம் ஸமர்ப்பிக்க ஸ்ரீரங்கம் செல்லும் பொழுது, வழியில் அநந்தாழ்வானைக் காண அவரது ஊரான சிறுபுத்தூருக்குச் சென்றார். வேதாந்தியை ஸந்யாஸ உருவில் கண்ட அநந்தாழ்வான் வியப்புற்று, ''வேதாந்தியான உமக்கு துரீய ஆஶ்ரமம் தேவையா? ஸ்ரீபராஶர பட்டரை சரணமடைந்தவர்களுக்கு பரமபதம் செல்ல வேறு உபாயம் வேண்டுமா? வியர்த்தபோது நீராடி, பசித்தபோது புசித்தும் இருந்தால் போதாதோ? ''நீரோ திருமந்த்ரத்தில்'' பிறந்து, ''த்வயத்தில்'' வளர்ந்து, த்வயைக நிஷ்டராய் விளங்குகிறீர். திருமந்த்ரம் ஆத்ம ஸ்வரூப ஞானத்தை அளித்து, நாம் எம்பெருமானுக்கே அடிமை என்பதைச் சொல்லுகிறது. த்வய மந்த்ரம், பிராட்டிக்கும் பெருமாளுக்கும் ஸேவை செய்வதையே உணர்த்துகிறது''. என்று கூறினார். இவ்வாறாக ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை ரத்தின சுருக்கமாக வெளியிட்டு வேதாந்தியை ஆசீர்வதித்து மகிழ்ந்தார். இந்த வேதாந்திதான் பிற்காலத்தில் நஞ்ஜீயர் (நிகமாந்த யோகி)

http://acharya.org

என்று பெயர் பெற்று திருவாய்மொழிக்கு ''ஒன்பதாயிரப்படி'' வ்யாக்யானத்தை அருளிச்செய்து பெருமை பெற்றார்.

தஞ்சீரை ஞானியர்கள் தாம் புகழும் வேதாந்தி
நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால் எஞ்சாத
ஆர்வமுடன் மாறன் மறைப்பொருளை ஆய்ந்துரைத்தது
ஏர் ஒன்பதினாயிரம்.

மணவாள மாமுனிகள் அருளிச்செய்துள்ள
உபதேச ரத்தினமாலை (42)

சீடர்களுக்குச் சொன்ன உபதேசக்கதை

ஸ்ரீஅநந்தாழ்வானின் சிஷ்யர்களில் பலர் வயது முதிர்ச்சி பெற்ற காரணமாக, தங்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப நினைத்து, அநந்தாழ்வானிடம் சென்று தங்களை ஆசீர்வதித்து, அறிவுரை வழங்கி வழிஅநுப்பும்படி வேண்டினர். அப்பொழுது, அவர் ஸத்ஸங்கத்தின் பெருமையை விளக்கும்படியான கீழ்க்கண்ட கதையை அவர்களுக்குச் சொன்னார். ஒரு சமயம் ஸ்ரீஶௌநக முனிவரும் ஆறுரிஷிபுங்கவர்களும் ஸ்தல யாத்திரையை முடித்துக்கொண்டு ஒரு காட்டு வழியே திரும்பிவந்து கொண்டிருந்தனர். அந்த இரவு நேரத்தில் மழை பெய்யத்தொடங்கியது. உடனே அவர்கள் அருகில் காணப்பட்ட குடிசைக்குள் நுழைந்தனர். அது திருடர்களின் குடியிருப்பு என்பதை அறியார்கள். திருடர்கள் தங்கள் தொழில் நிமித்தமாக வெளியில் சென்றிருந்தார்கள். குடிசைக்குள் ஒருவரும் இல்லை. ஆனால் உள்ளிருந்த ஒரு கிளி மட்டும் அவர்களைக் கண்டு, ஒருவரும் வீட்டில் இல்லாதபொழுது திருடர்களைப்போல் ஏன் உள்ளே வந்தீர்கள்? வெளியே போங்கள்'' என்று கடுமையாகக் கூறிற்று. அந்த முனிவர்களும் கிளியின் சுடுசொல் பொறுக்காமல் மழையில்

http://acharya.org

நனைந்துகொண்டு வேறு புகலிடம் தேடிச் சென்றனர். சிறிது தூரத்திலேயே மற்றொரு பர்ணசாலை தென்பட, அங்கு நுழைந்தார்கள். அங்கும் ஒருவரும் கண்ணில் படவில்லை அந்த குடிலைச்சேர்ந்த முனிவர்கள் ப்ராதஸ்நாநம் செய்வதற்காக வெளியே போயிருந்தார்கள். அந்த பர்ணசாலையிலும் ஒரு கிளி காணப்பட்டது. அந்தக் கிளி அவர்களை பார்த்தவுடன், ''வாருங்கள்! வாருங்கள்! நலமா! உங்கள் வரவு நல்வரவாகுக!'' என்று குசலம் விசாரித்துவிட்டு அங்குள்ளபழங்களை எடுத்து உண்ணும்படி கேட்டுக்கொண்டது.

இரண்டு கிளிகள் இரண்டு மாறுபட்ட விதமாகச் செயல்படுவதைக் கண்ட முனிவர்கள் ஆச்சர்யப்பட்டு நிற்பதைக் கண்ட கிளி அவர்களை நோகி. ''நாங்கள் இருவரும் ஒரே பெற்றோர்களின் குழந்தைகள் தான். நான் முனிவர்களால் வளர்க்கப்பட்டதால் இப்படி இருக்கிறேன். அந்தக்கிளி திருடர்களால் வளர்க்கப்பட்டதால் அப்படி இருக்கிறது. ஸத்ஸங்கமே நற்பண்புகளை உருவாக்க உதவுகிறது'' என்று சொல்லிற்று. ஶௌநகர் மிகவும் மகிழ்ந்து அக்கிளியை ஆசீர்வதித்தார். இக்கதையைக் கேட்ட அநந்தாழ்வானின் வயதான சீடர்கள் தாங்கள் ஸத்ஸங்கத்தில் மட்டுமே பங்குகொள்ளுவதாக உறுதிகூறி, விடைபெற்றுச் சென்றனர்.

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஶ்சல தத்வம்
நிஶ்சலதத்வே ஜீவன் முக்தி:
பஜகோவிந்தம் பஜகோவிந்தம் ।

ஆதிஶங்கரர்

http://acharya.org

பரமபத ப்ராப்தி

ஸ்ரீ அநந்தாழ்வான் தன இறுதி மூச்சுள்ளவரை திருமலையில் திருவேங்கடவனுக்கு கைங்கர்யம் செய்வனே செய்துவந்தார். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளின் அவதாரதினமான திருவாடிப்பூர நன்னாளில் திருவேங்கடமுடையான் அவரை தன் திருவடிகளில் சேர்த்துக்கொண்டார். அவர் பரமபதித்த மகிழ மரத்தடியில் இன்றும் திரு ஆடிப்பூர தினத்தன்று அந்த மகிழமரத்திற்கு கோயில் மரியாதைகளுடன் ஸ்ரீநிவாஸ உத்ஸவமூர்த்தி வந்து அநுக்ரஹிக்கிறார். என்பது குறிப்பிடத்தக்கது.

அநந்தாழ்வான் எச்சானுக்கு அருளிச்செய்தது

இவ்வாத்மாவாகிற பெண்பிள்ளையை ஆசார்யனாகிற பிதா, எம்பெருமானாகிற வரனுக்கு, குருபரம்பரையாகிற புருஷகாரத்தை முன்னிட்டு, த்வயமாகிற மந்த்ரத்தைச் சொல்லி, நீர் வார்த்துக் கன்யகா தானமாகக் கொடுத்தான்.

வார்த்தாமாலை 151

ஸ்ரீஅநந்தாழ்வான் திருவடிகளே சரணம்

திருமலை அநந்தாழ்வான் கைங்கர்ய ஸபா வெளியீடு

http://acharya.org

அநந்தாழ்வான் பிருந்தாவனம்

திருமலை

http://acharya.org

all about SRI ANANTHAZHWAN

Served Lord VENKATESA so sincerely that no one can excel him

Respected by the entire Vaishnavite comunity of his time.

Indifatigable sincere service is the secret of his success.

As per Sri Ramanuja's wish, boldly went to TIRUMALA for service.

Never tolerated others to have a share in his holy service.

All the good qualities of a devotee were found in him.

Notable Ramanuja's sub-temple was erected at TIRUMALA

Tirumalai Ananthanpillai is the sur-name of his successors.

History records that SRIVENKATESA used to talk to him often.

Absolutely removed the ignorance of those, who approached him.

Zealous pushpa Kainkarya was his primary duty at TIRUMALA

Help canme from SRINIVASA quite often when in distress.

Whole tank was contructed completely by himself with his spouse.

Amazingly, least bothered about the poisonous snake-bite

Noble qualities of a true Vaishnavite were given in a nutshell.

(Late) -D. RANGACHARI

Tiger printers Srirangam,Cell-9585381567

http://acharya.org